# ACT MAGISTRATES COURT

TAMIL

# பாதுகாப்பு உத்தரவிற்கான விண்ணப்பத்திற்குப் பதிலளித்தல்

## குடும்ப வன்முறை உத்தரவு (Family Violence Order, FVO), தனியாள் பாதுகாப்பு உத்தரவு (Personal Protection Order, PPO) அல்லது தனியாள் பாதுகாப்பு (பணியிட) உத்தரவு (Personal Protection (Workplace) Order, WPO) விண்ணப்ப நகலொன்று உங்களுக்கு "வழங்கப்பட்டுள்ளது" (அதாவது, கொடுக்கப்பட்டுள்ளது)

தமது பாதுகாப்பைப் பற்றிய அச்சத்தின் காரணமாக யாரோ ஒருவர் உங்களுக்கு எதிராக ஓர் உத்தரவை நாடுகிறார்,

"விண்ணப்பதாரர்" (உத்தரவு வேண்டி விண்ணப்பித்த நபர்) கோரும் விடயங்கள் மற்றும் விண்ணப்பதாரர் உங்கள் மீது விதிக்க விரும்பும் நிபந்தனைகள் ஆகியவற்றை நீங்கள் பெற்றுள்ள விண்ணப்பமானது கோடிட்டுக் காண்பிக்கும்.

ஓர் உத்தரவானது, விண்ணப்பதாரரிடமிருந்து விலகி இருக்க வேண்டும் அல்லது அவர்களைத் தொடர்பு கொள்ளாதிருக்க வேண்டும் போன்ற நிபந்தனைகளை உங்கள் மீது விதிக்கிறது.

ஓர் உத்தரவுக்கான விண்ணப்பத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கும்.

## உங்களுக்கும் இடைக்கால உத்தரவின் ஒரு நகல் வழங்கப்பட்டிருந்தால்

இறுதி உத்தரவுகளுக்கான விண்ணப்பம் முடிவு செய்யப்படும் வரை, நீதிமன்றம் ஓர் இடைக்கால உத்தரவை (interim order) வழங்கலாம். இறுதி உத்தரவு (final order) வழங்கப்படும்வரை அல்லது இடைக்கால உத்தரவு தள்ளுபடி செய்யப்படும்வரை, இடைக்கால உத்தரவு தற்போது நடைமுறையில் உள்ளதுடன், அமுல்படுத்தவும் செய்யப்படும். நீங்கள் கட்டுப்பட வேண்டிய பல நிபந்தனைகளை இது உங்களுக்கு விதிக்கிறது. நீங்கள் உத்தரவைக் கடைப்பிடிக்கத் தவறினால் அபராதம் விதிக்கப்படலாம்.

இடைக்கால உத்தரவின் நிபந்தனைகள் மற்றும் அது அமுலிலுள்ள காலப்பகுதி ஆகியவை உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளன. உத்தரவை மீறுவதற்கான அபராதம் பற்றியும் அது கூறுகிறது. உத்தரவு உங்களுக்கு புரியவில்லை என்றால் நீங்கள் சட்ட ஆலோசனையைப் பெற வேண்டும்.

## அடுத்து நடப்பது என்ன?

***இடைக்கால உத்தரவு இல்லை:***

குறித்த திகதி மற்றும் நேரத்தில் ஒரு கலந்துரையாடலுக்காக (conference) இந்த விடயம் அட்டவணைப்படுத்தப்படும். இறுதி உத்தரவுக்கான விண்ணப்பத்தை நீங்கள் மறுதலிக்க விரும்பினால், அந்தத் திகதியில் நீங்கள் நீதிமன்றத்தில் சமுகமளிக்க வேண்டும். சமுகமளிக்கத் தவறினால், நீங்கள் அவ்விடத்தில் இல்லாமலேயே உத்தரவுகள் ஏற்படுத்தப்படலாம்.

***இடைக்கால உத்தரவு:***

இடைக்கால உத்தரவு மற்றும் விண்ணப்பத்துடன், இடைக்கால உத்தரவின் ஒரு "ஒப்புதல் நகல்" ("endorsement copy") மற்றும் இவ்விடயம் பற்றி நீதிமன்றத்தில் நடக்கவுள்ள ஒரு கலந்துரையாடலுக்கான திகதி, நேரம் அடங்கிய ஓர் அறிவித்தலும் உங்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கும்.

இடைக்கால உத்தரவு இறுதி உத்தரவாக மாற்றப்படுவதை நீங்கள் ஒப்புக்கொண்டால், பூர்த்தி செய்யப்பட்ட ஒப்புதல் நகலை நீதிமன்றத்திற்குத் திருப்பி அனுப்பி வையுங்கள். இதை நீங்கள் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ செய்யலாம். நீங்கள் இப்படிச் செய்தால், நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற தினத்தில், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட காலத்திற்கு இடைக்கால உத்தரவு இறுதி உத்தரவாக மாறும். ஒப்புதல் நகலை கலந்துரையாடல் திகதிக்கு முன்னர் நீதிமன்றம் பெற்றால், நீங்கள் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய அவசியமில்லை.

ஒப்புதல் நகலை நீங்கள் திருப்பி அனுப்பவில்லை என்றால், கலந்துரையாடலுக்கு நீங்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும். உங்களுக்குக் கொடுக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்தில் கலந்துரையாடலுக்கு நீங்கள் சமுகமளிக்க வேண்டும், இல்லையெனில் இடைக்கால உத்தரவு நீங்கள் அங்கு இல்லாமலேயே இறுதி உத்தரவாக மாற்றப்படலாம்.

## நான் 18 வயதிற்குட்பட்டவர்

நீங்கள் 14 வயதிற்குட்பட்டவராக இருந்தால், உங்களுடன் நீதிமன்றத்துக்குச் செல்ல ஒரு வழக்காடல் பாதுகாவலர் (litigation guardian) உங்களுக்கு இருக்க வேண்டும். நீங்கள் 14 வயதுக்கு மேற்பட்டவராகவும், ஆனால் 18 வயதிற்கு உட்பட்டவராகவும் இருந்தால், நீங்களும் ஒரு வழக்காடல் பாதுகாவலரைக் கொண்டிருக்க வேண்டி ஏற்படலாம்.

ஒரு வழக்காடல் பாதுகாவலர் என்பவர் 18 வயதுக்கு மேற்பட்ட, நீதிமன்றத்தில் உங்களுக்கு உதவ முடியுமான ஒரு நபர் ஆவார் (எடுத்துக்காட்டாக, உங்களுடைய தாய், தந்தை அல்லது நீங்கள் நம்பும் பொறுப்புள்ள வயதுவந்தவர்). நீதிமன்றத்தில் உங்களுக்கு உதவக்கூடிய பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது பொருத்தமான பிற வயதுவந்தவர்கள் உங்களுக்கு இல்லையென்றால், நீங்கள் பொது வழக்கறிஞரை (Public Advocate) **02 6207 0707** -இல் அழைக்க வேண்டும்.

## கலந்துரையாடல் தினத்தில் என்ன நடக்கும்?

உங்களுடைய கலந்துரையாடலுக்கு நீங்கள் வந்துவிட்டீர்கள் என்று முன் விசாரிப்புக் கூண்டில் உள்ள ஒருவரிடம் நீங்கள் சொல்ல வேண்டும். கலந்துரையாடலை நடத்தும் துணைப்பதிவாளரால் உங்கள் பெயர் அழைக்கப்படும்.

கலந்துரையாடலின்போது நீங்களும் விண்ணப்பதாரரும் வெவ்வேறு அறைகளில் இருப்பீர்கள். உங்களுக்கு ஆதரவாக யாராவது ஒருவரை நீங்கள் உடன் வைத்துக்கொள்ளலாம்.

நீங்களும், விண்ணப்பதாரரும் ஒரு முடிவுக்கு உடன்பட முடியுமா என்று துணைப் பதிவாளர் பார்ப்பார்.

அவுஸ்திரேலியத் தலைநகர்ப் பிராந்தியச் சட்ட உதவி (Legal Aid ACT) -யானது சட்ட ஆலோசனை மூலம் உங்களுக்கு உதவக்கூடிய ஊழியர்களை நீதிமன்றத்தில் கொண்டுள்ளது. வீட்டு வன்முறை நெருக்கீட்டுச் சேவை (Domestic Violence Crisis Service – DVCS) உங்களுக்கு ஆதரவளிக்கக்கூடிய ஊழியர்களை நீதிமன்றத்தில் கொண்டுள்ளது. உங்களுக்கு சட்ட ஆலோசனை அல்லது ஆதரவு தேவைப்பட்டால், தயவுசெய்து விசாரிப்புக் கூண்டில் உள்ள நபரிடமோ அல்லது துணைப்பதிவாளரிடமோ கேளுங்கள்.

## கலந்துரையாடலின் சாத்தியமான பலாபலன்கள்

- இறுதி உத்தரவுகளுக்கு நீங்களும் விண்ணப்பதாரரும் உடன்படுகிறீர்கள். காவல்துறையினர் உத்தரவுகளை அமுல்படுத்துவர்.
- நீங்களும், பிரதிவாதியும் உறுதிமொழிகளுக்கு உடன்படுகிறீர்கள். உறுதிமொழிகள் எனப்படுவது நீதிமன்றத்திற்கு ஒருவர் அளிக்கும் முறைசார் வாக்குறுதியாகும். ஓர் உறுதிமொழி மீறப்பட்டால், காவல்துறையினரால் அதை அமுல்படுத்த முடியாது.
- நீங்கள் உடன்படாவிட்டால், நீதிமன்றம் உங்கள் விடயத்தை ஒரு நீதிபதி முன்பாக விசாரணைக்கு அட்டவணைப்படுத்தும்.
- நீங்கள் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்காதுவிட்டால், நீங்கள் இல்லாத நேரத்தில் இறுதி உத்தரவுகள் பிறப்பிக்கப்படலாம்.
- விண்ணப்பதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால், விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படலாம் அல்லது மற்றொரு நாளில் மீண்டும் நீதிமன்றத்திற்கு வரும்படி கேட்கப்படலாம்.

## நீதிமன்ற விசாரணை ஒன்றில் என்ன நடக்கும்?

இறுதி உத்தரவின் அவசியம் பற்றிய ஒரு முடிவை நீதிபதி எடுப்பதற்கு ஏதுவாக நீங்கள் ஆதாரங்களை வழங்க வேண்டும். என்ன நேர்ந்துள்ளது என்பதை மற்றவர்கள் நீதிமன்றத்தில் சொல்ல வேண்டும் என்று நீங்கள் விரும்பலாம். அவர்கள் சாட்சிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். உங்களிடம் சாட்சிகள் இருந்தால், விசாரணைக்கு ஒதுக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்தில் நீதிமன்றத்திற்கு வருமாறு அவர்களை நீங்கள் கேட்க வேண்டும். புகைப்படங்கள் அல்லது செய்திகள் போன்ற உங்கள் வழக்குக்குப் பொருத்தமான பதிவுகள் உங்களிடம் இருந்தால், அவற்றினை நீதிமன்றத்திற்குக் காண்பிக்க நீங்கள் வரும்போது கொண்டுவர வேண்டும்.

விண்ணப்பதாரர் தமது விடயத்திலும் அப்படியே செய்ய முடியும்.

இச்செயன்முறை பற்றி உங்களுக்கு உறுதியாய்த் தெரியாவிட்டால், சட்ட ஆலோசனையைப் பெறவும்.

## இந்த விடயம் விசாரணைக்காக அட்டவணைப் படுத்தப்பட்டால், இடைக்கால உத்தரவுக்கு என்ன நடக்கும்?

அதை நிறுத்த நீதிமன்றம் உத்தரவிடும்வரை இடைக்கால உத்தரவு தொடரும். இடைக்கால உத்தரவைத் தொடர்வதற்கு நீங்கள் உடன்படவில்லை என்றால், கலந்துரையாடல் நடக்கும் தினத்தில் இடைக்கால உத்தரவு தொடர்வது குறித்து முடிவெடுப்பதற்காக ஒரு நீதிபதி இந்த விடயத்தை விசாரிப்பார்.

## ஓர் உத்தரவு எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்?

ஒரு தனியாள் பாதுகாப்பு உத்தரவு (PPO) 12 மாதங்கள் வரையும், குடும்ப வன்முறை உத்தரவு (FVO) 24 மாதங்கள் வரையும், அல்லது விஷேடமான வழக்குகளில் அவற்றைத் தாண்டியும் நீடிக்கும். இறுதி உத்தரவை நீடிக்க விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கலாம். நீடிப்புக்கான விண்ணப்பம் ஒன்றினை நீங்கள் எதிர்க்கலாம்.

## உத்தரவினை மாற்ற முடியுமா?

உங்களுக்கு எதிராக ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டால், உத்தரவை மாற்ற நீதிமன்றத்தில் நீங்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரரும் இவ்வாறு செய்யலாம்.

## என்னைப் பற்றிய குற்றவியல் பதிவு இருக்குமா?

ஒரு பாதுகாப்பு உத்தரவானது அதனை மீறியதாக நீங்கள் குற்றம் சாட்டப்பட்டாலன்றி, உங்களைப் பற்றிய ஒரு குற்றவியல் பதிவினை ஏற்படுத்தாது.

## உத்தரவானது மற்ற மாநிலங்களில் செல்லுபடியாகுமா?

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து முழுவதும் குடும்ப வன்முறை உத்தரவுகளை அமுல்படுத்த முடியும். ஒரு தனிநபர் பாதுகாப்பு உத்தரவினைப் பிற மாநிலங்களில் மற்றும் பிரதேசங்களில் பதிவு செய்வதன் மூலமாக அம் மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இது அமுல்படுத்தப்படலாம்.

ஓர் உத்தரவு மீறலானது அவுஸ்திரேலிய தலைநகர்ப் பிரதேசம் மற்றும் மீறல் நிகழும் மாநிலம் ஆகிய இரண்டிலுமோ, அல்லது அப்பிரதேசத்தில் மட்டுமோ ஒரு குற்றமாகக் கொள்ளப்படலாம்.

## முக்கியமான தொலைபேசி எண்கள்

**அவசரசேவை**
**000**

**Protection Unit ACT Magistrates Court (அவுஸ்திரேலிய தலைநகர்ப் பிரதேச நீதிவான் நீதிமன்றப் பாதுகாப்புப் பிரிவு)**
**02 6205 4939**

**ACT Policing (அவுஸ்திரேலிய தலைநகர்ப் பிரதேசக் காவல்துறை)**
**131 444**

**Victim Support ACT (அவுஸ்திரேலிய தலைநகர்ப் பிரதேச பாதிப்புற்றோருக்கான ஆதரவுச் சேவை)**
**1800 822 272**

**Legal Aid ACT (அவுஸ்திரேலிய தலைநகர்ப் பிரதேச சட்ட உதவிச் சேவை)**
**02 6207 1874** அல்லது **1300 654 314**

**Domestic Violence Crisis Service – DVCS (வீட்டு வன்முறை நெருக்கீட்டுச் சேவை)**
**02 6280 0900**

## அணுகும் முறை

- உங்களுக்கு மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவை தேவைப்பட்டால், TIS ஐ **13 14 50** இல் அழைக்கவும் அல்லது **www.tisnational.gov.au** -ஐப் பார்வையிடவும்.
- நீங்கள் காது கேளாதவராக, அல்லது பேச்சு அல்லது செவித்திறன் குறைபாடு உள்ளவராக இருந்து, உங்களுக்கு ஒரு தொலை-எழுத்து அச்சுப்பதிவு (டெலிடைப்ரைட்டர்) சேவை தேவைப்பட்டால், **13 36 77** -ஐ அழைத்து, **02 6205 0000** -ஐக் கேட்கவும்.
- Speak and Listen -ஐப் பயன்படுத்துவோர், **1300 555 727** -ஐ அழைத்து, **02 6205 0000** -ஐக் கேட்கவும்.
- இந்த ஆவணத்தை நீங்கள் பெரிய அச்சில் பெற விரும்பினால், எங்கள் நீதிமன்ற உதவி அதிகாரியை **02 6205 0322** -இல் அழைக்கவும்.

*இந்த ஆவணமானது சட்ட ஆலோசனைக்கான ஒரு மாற்றீடாக இருக்கும் நோக்கத்தைக் கொண்டதன்று. உங்கள் வழக்கை எவ்வாறு தொடர்வீர்கள் அல்லது நடத்துவீர்கள் என்று உங்களுக்கு நிச்சயமற்றிருந்தால், தயவுசெய்து சட்ட ஆலோசனையைப் பெறவும்.*